Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# தமிழ் அலை

Tamilalai

தினசரி

அதிநவீன தொழில்நுட்பத்தில்
உங்கள் அச்சுப்பதிப்புக்களை
(கறுப்புவெள்ளை, கலர்)
விரைவாக செய்து கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய
ஒரே இடம்:
நித்தி பதிப்பகம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065. 2226110

அலை - 01 07-01-2004 புதன்கிழமை ஒலி - 93

# அரச பயங்கரவாதத்திற்கு வெள்ளி விழா

# மட்டக்களப்பில் நினைவுக் கருத்தரங்கு

(இரா.துரைரெட்ணம்)

**சிறிலங்கா அரசினால் தமிழின அழிப்புக்காக திட்டமிட்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தி தற்போது 25 வருடங்கள் நிறைவேறும் போதும் அந்தச் சட்டம் இதுவரை அகற்றப்படவில்லை.**

இந்த 25 வருடங்களில் தமிழ் மக்களில் பல்லாயிரக்கணக் கானவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சித்திரவதையென்றும், படுகொலையென்றும், காரணமின்றி கைது செய்யப்பட்டும், கேள்வி எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டும், மரணம் சம்பவித்தால் அந்த சடலத்தை உறவினர்களுக்கு கையளிக்காமல் எரிக்கப்பட்டும், உயிருடன் டயர் போட்டு எரிக்கப்பட்டும், உடமைகள் பறிக்கப்பட்டும், வாழ்ந்த அந்த கொடுமைகளை மீட்டிப்பார்க்கும் பயங்கரவாதச் சட்டம் அமுல்படுத்திய 25 வருடப்பூர்த்தியை முன்னிட்டு மட்டு நகரில் கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது.

மனித உரிமைகளுக்கான அபிவிருத்தி நிலையத்தின் அனுசர

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்டக்களப்பில் கண்ணிவெடி அகற்றும் பணி மீண்டும் ஆரம்பம்

(எஸ்.ஜெயானந்தமூர்த்தி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கண்ணிவெடி அகற்றும் பணியினை இவ்வார இறுதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எஸ்.தேவராஜன் தெரிவித்தார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இவர்கள் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாலையடிவட்டை பகுதியில் முகாமிட்டு கண்ணிவெடி மற்றும் பொறிவெடிகளை அகற்றி வந்தனர்.

இவர்களுக்கு கடந்த டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இம்மாதம் ஆறாம் திகதி மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப்படவிருந்தன. விடுமுறையில் சென்றவர்கள் தற்போது கடமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். அனைவரும் வந்து சேர்ந்ததும் இவ்வார இறுதி யில் மீண்டும் பணிகள் ஆரம்பிக்க வுள்ளன.

தற்போது பயிற்சி பெற்ற முப்பது பேரே இப்பணியில்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா கப்பல் வழங்க நடவடிக்கை

(நமது நிருபர்)

அமெரிக்கக் கடற்படையின் கரையோரப் பாதுகாப்புப் படையின் 'கரேஜஸ்' கப்பலை இலங்கை கடற்படைக்கு வழங்குவது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக அமெரிக்கப்பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

அமெரிக்க கரையோர காவற்படை மற்றும் பாதுகாப்பு கூட்டிணைவு ஏஜென்சி ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவே கொழும்புக்கு விஜயம் செய்திருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க காவற்படையின் சேவையிலிருந்து நீக்கப்பட்ட ''கரேஜஸ்'' என்ற ரோந்துக் கப்பலை இலங்கைக் கடற்படைக்கு வழங்க அமெரிக்கா இணங்கியிருந்தது. இந்தக் கப்பலை வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்கே அமெரிக்க அதிகாரிகள் இங்கு வந்துள்ளனர். இந்தக் குழுவினர் இலங்கையிலுள்ள துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## எல்லை கடந்த பத்திரிகையாளர்கள் எங்களை சந்திக்கவில்லை

(திருக்கோவில் நிருபர்)

பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் எல்லை கடந்த பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் (ஆர்.எஸ்.எல்.) அம்பாறை மாவட்டத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் எவரையும் சந்திக்காது சென்றமை அவர்களின் நேர்மைத் தன்மையை களங்கம் ஏற்படுத்தும் ஒரு செயலாக கருத இடமுண்டு என அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கு வருகை தந்த எல்லை கடந்த பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல தமிழ், முஸ்லிம் ஊடகவியாலாளர்களை சந்தித்து ஊடகத்துறை சம்பந்தமான கருத்துக்களை கேட்டறிந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் ஊடகவியலார்கள் ஒரு சிலரின் கருத்தை மட்டும் அறிந்து கொண்ட இப் பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் தமிழ் ஊடகவியலாளர்கள் எவரையும் சந்திக்காமல் சென்றமை தமக்கு வேதனை தருவதாகவும் தெரிவித்தனர்.

எல்லை கடந்த பத்திரிகையாளர் சங்கத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் பண்டார உட்பட மூவர் மட்டக்களப்ப அம்பாறை மாவட்டத்திற்கு கடந்த வாரம் வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

## கணனி இறுதிப் பரீட்சை

(அரியம்)

தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்தப்பட்டு வந்த இலவசக் கணனிப் பயிற்சி வகுப்பு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர் வரும் 24.01.2004ம் திகதி 9.00 மணிக்கு மட். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் மாணவர்கள் தவறாது பரீட்சைக்கு சமூகம் அளிக்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் கு.தேவராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## காரைதீவு வைத்தியர்களை மக்கள் பாராட்டுகின்றனர்.

(எஸ்.ரவீந்திரன்)

காரைதீவு சுற்றையல் கூறு வைத்தியசாலையில் கடமை புரிந்த டாக்டர் கதிர்மலர் மகேசனின் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

தற்போது பெரும்பான்மை இன டாக்டர் என்.பி.பிறேமவர்த்தன வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகவும், டாக்டர் திருமதி தமிழ் வண்ணன் வைத்திய அதிகாரியாகவும், டாக்டர் கதிர்மலர் மகேசன் பதிவு வைத்திய அதிகாரியாகவும் கடமைபுரிகின்றனர்.

தற்போது நோயாளர்களின் எண்ணிக்கை இங்[illegible]திகரித்துள்ளதுடன் தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் சிகிச்சை பெறுவதையும், அவதானிக்க முடிகிறது.

பெரும்பான்மையின டாக்ட

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## செஞ்சிலுவைபிரதிநிதிக்கு பிரியாவிடை

(எஸ்.ரவீந்திரன்)

சர்வதேச செஞ்சிலுவை சங்க மட்டக்களப்பு மாவட்ட வதிவிடப் பிரதிநிதி ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த செல்வி பிலிப்பினோ பிரியாவிடை பெற்று நாடு திரும்பினார்.

புதிய வதிவிடப் பிரதிநிதியாக ஜெனிவா நாட்டைச் சேர்ந்த மைக்கல் கிளிடன் பதவிவிலகலை பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு மாவட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகத்தில் பிரியாவிடை, பதவியேற்பு நிகழ்வு கடந்த 3ந் திகதி நடைபெற்றது.

### போடியார் பொறி வெடி

அரசியல் அதிகாரச் சண்டை சமாதான முயற்சிகளை சீர்குலைத்து விடும்

-ஜனாதிபதி-



அவங்க ''கோழிச்சண்ட'' புடிச்சி லீவாகும் மட்டும் ''வேலிச்சண்ட'' துவங்கா எண்டதுக்கு என்ன உத்தரவாதம்...



நேற்று முன்தினம் மட்டு. நகர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மண்டபத்தில் இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான ஆரம்பக் கூட்டத்தில் கலந்துகொண்ட கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் எம்.எஸ். மூக்கையா உட்பட கலந்துகொண்ட ஏனைய பிரமுகர்கள்

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

தமிழ்அலை
Tamilalai
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065. 2226110
தொலைநகல:- 065. 2226110
மின்னஞ்சல்:- tamilalai32@yahoo.com.
இணையத்தளம்:- www.tamilalai.net

07.01.2004

## பொங்கும் தமிழ்

வீரம் விளை நிலத்தில் மீண்டும் ஒரு பொங்கு தமிழ் பொங்கப் போகின்றது. ஆம் மட்டக்களப்பு மண்ணில் எதிர்வரும் ஜனவரி 21ம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக வளாக த்தில் அந்த மக்கள் சங்கமம் வங்கக் கடல் போல் ஆர்த்தெழுந்து தமது உள் ளக் குமுறல்களை ஒருமித்த குரலால் ஓங்கி உலகிற்கு ஒரு செய்தியை காட்டவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தற்போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்து செய்வதற்கு உரிய வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

தமிழினம் சிறிலங்கா பேரினவாதத்தில் சிக்குண்டு உரிமை மறுக்கப்பட்ட நிலையில் இழுத்தடிப்புக்கள், ஏமாற்றங்கள், தடைகள், படைகளின் நெருக்குவாதங்கள் எனத் தொடர்கதை யாகவே தொடர்கி ன்றன.

எங்கள் நிலம் எமக்கு வேண்டுமானால் அந்த நிலத்தை பெறுவதற்கான வளிவகைகளைச் செய்வது தமிழ் மக்களின் பொறுப்பாகும்.

தற்போது போராட்டம் மட்டுமே இடம்பெறவில்லை. அனியாயம் அவலம் தொடர்கிறது. என்ற யதார்த்தத்தை இன்னும் பலர் புரியாமல் இருப் பது வேதனை தான்.

உண்மையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை எப்போது எமக்கு கிடைக்கின்றதோ அப்போது தான் எமக்கு விடுதலை.

அந்த உரிமைக்காகப் போராட வேண்டியது எமது பிறப்புரிமை போராட்டங்களின் வடிவம் மாறலாம் ஆனால் இலக்கு எப்போதுமே மாறாது மாறவும் முடியாது.

இன்று பதினேழாயிரத்து எண்ணூற்றுக்கு மேற்பட்ட மாவீரர்களின் தியாகத்தில் இருந்து தான் போர் ஓய்து சர்வதேச அரங்கில் இன்று எமது விடுதலைப்போர் வெற்றியின் விழும்பை நோக்கிச் சென்றுள்ளது.

''புலிகளே மக்கள் மக்களே புலிகள்'' இதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லாதவகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகளின் தடையை சர்வதேச நாடுகளும், அயல் நாடான இந்தியாவும் உடனடியாக நீக்க வேண்டுமென இந்த ''பொங்கும் தமிழ்'' பறை சாத்தட்டும்.

### இன்றைய நாள்

சூரி ~ காலை 06:32 மாலை 06:00
ராகு ~ ந.ப 12:15 பி.ப 01:41
எம ~ காலை 07:57 மு.ப . 09:23
தெய்.முகூ ~ மு.ப.11:18 ந.ப 12:15
நக்ஷ ~ தியா வைகறை 05:29
வைகறை 06:31
திதி ~ மு.இ 09:28 வரை பூரணை
நக்ஷ பி.ப 04 : 15 ~ வரை திருவாதிரை
சு.யோகம் ~ முழுவதும் சித்தம்
சிராத்தம் ~ மார்கழி மாத பூரணை
பிறந்ததின வழிபாடு:~ திருவாதிரை

# பௌத்த பிக்குவின் மரணமும் கிறிஸ்த்தவர்கள் மீதான தேரரின் விசமத்தனமும்.

நாட்டில் பௌத்த பேரினவாதம் நாளுக்கு நாள் தனது செயற்பாடுகளை வெவ்வேறு வடிவத்தில் செய்து வருகின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக அரை நூற்றாண்டிற்கும் மேலாக இந்த பௌத்த பேரினவாதமே வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதான். கிறிஸ்தவ சிங்கள மக்களைக்கூட இந்த பௌத்த பேரினவாதம் விட்டு வைத்ததில்லை. 1975ம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயருக்கு எதிராக தேசிய பௌத்த பிக்குகள் சங்கம் போர்க்கொடி தூக்கியது. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கிறிஸ்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டும் இருந்தன. அதே போன்று 1995ம் ஆண்டு பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வதைக் கண்டித்து தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை பௌத்த பேரினவாதம் கொழும்பில் நடாத்தியது. தீக்குளிக்கப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்தது. இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

தற்போது புதிய பிரச்சினை ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. விருது வாங்குவதற்காக ரஷ்யாவிற்கு சென்ற கங்கொடவில சோமதேரர் அங்கு மாரடைப்பால் மரணமடைந்ததற்கு எதிர்ப்புக் கிளம்பியிருப்பது தான் அந்தப் பிரச்சினை. இயற்கை மரணத்தைக் கூட நம்பாத அல்லது வேண்டுமென்றே புரளி கிளப்புகின்ற பேரினவாதம் தேரரின் மரணம் குறித்து கிளம்பும் சந்தேகங்கள் வேடிக்கை யானது. பௌத்த மத ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் இலங்கையில் உடைத்தெறிவதற்காக திட்டமிடப்பட்டு தேரர் கொல்லப்பட்டதாக ஒரு தகவல் கூறுகின்றது. தேரர் ரஷ்யாவில் பெற்ற விருதினால் சிறிலங்காவிற்கு ஏற்பட்டிருக்கும் பெயரையும், புகழையும் தாங்கிக் கொள்ள முடியாத சிறிலங்காவைச் சேர்ந்த பௌத்த தேசிய வாதத்திற்கு எதிரான சில சிங்கள கிறிஸ்தவர்கள் கொலை செய்திருக்கலாம்என மற்றொரு தகவல் கூறுகின்றது.

இந்தத் தகவல்களை வெளியிட்டவர்கள் வேறுயாருமல்ல. தேசிய சங்க சபாவின் தலைவர் எல்லாவெல தேரர். உடுகம் பொல உத்தரகித்திரதேரர் ஆகியோரே அவ்வாறு கூறியிருக்கின்றனர். அது மாத்திரமல்ல பௌத்த குருமார் அல்லாத பௌத்த பேரினவாத இயக்கங்கள் நிறுவனங்களும் தேரரின் மரணம் தொடர்பாக பல்வேறுபட்ட சந்தேகங்களையும், ஊகங்களையும் கிளப்பி மதரீதியான கலவரங்களுக்கும் வழிவகுக்கின்றனர்.

மறைந்த கங்கொடவில சோமதேரரின் பூதவுடல் சிறிலங்காவிற்கு கொண்டு வரப்பட்ட அன்றைய தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சமீபமாகவுள்ள சிங்கள கிறிஸ்தவ ஆலயங்கள் சிலவற்றுக்குள்ளும் புகுந்து பல அட்டகாசங்களும் இடம்பெற்றுள்ளன. மாரடைப்பால் தேரர் மறைந்தார் என்பதை மறுத்த பேரினவாதம் அவரது பூதவுடல் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்ட அன்றைய தினமே சமீபமாகவுள்ள ராகம வைத்தியசாலையில் பிரேத பரிசோதனையையும் நடாத்தியுள்ளது. கட்டுநாயக்கா விமானநிலையம் ராகம போன்ற பிரதேசங்களில் கிறிஸ்தவ சிங்கள மக்களே பெரும்பான்மையாக வாழுகின்றனர். தேரரின் பூதவுடல் கொண்டுவரப்பட்ட அன்றைய தினம் இந்தப்பகுதிகளில் பதற்ற நிலை காணப்பட்டது. வீதிக்கு வீதி மஞ்சள் நிறக் கொடிகளும் தேரரின் படங்களும் ஒட்டப்பட்டு சோக கீதங்களும் இசைக்கப் படுகின்றன. ஒரு சமயத் தலைவருக்கு அஞ்சலி செலுத்துவது தவறானதல்ல. ஆனால் வீதியால் போகின்றவர்கள் வருகின்றவர்கள் தாக்கப்பட்டு வீதி கள் வழிமறிக்கப்பட்டு அஞ்சலி செலுத்துவது பௌத்த தர்மமா? தேரர் மாரடைப்பால் இறந்தார் என்று வைத்திய நிபுணத்துவத்தில் பேர் பெற்ற ரஷய வைத்தியர்கள் கூட தமது வைத்திய அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளனர். ஏன் ராகம வைத்தியசாலை வைத்தியர்களும் அவ்வாறு தான். தமது விசாரணை அறிக்கையில் சொல்லியிருக்கின்றனர். இதன் பின்னரும் பௌத்த பேரினவாதம் சந்தேகம் கொள்வதன் அர்த்தமென்ன?

மறைந்த சோமதேரர் நிரந்தரமாக வசித்த மகரகம விகாரைக்கு அவரது பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்ட போது மொரட்டுவையிலுள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்று சேத மாக்கப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தின் பௌத்தகுருவும் தாக்கப்பட்டிருக்கின்றார். தேரர் மறைந்த நாளில் இருந்து சிறிலங்காவிற்கு பூதவுடல் கொண்டுவரப்பட்ட நாள் வரையும் அதன் பின்னரும் சிங்கள கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக பௌத்த பேரினவாதம் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகள் எதுவும் ஊடகங்களில் வெளியிடப்படவில்லை. மாறாக நாடு சோகத்தில் மூழ்கியிருப்பதாகவே ஊடகங்கள் சித்தரிக்கின்றன. கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சிலிங்கோ நிறுவனத்தின் தலைவர் லலித் கொத்தலாவலைக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ரஷயாவில் உள்ள கிறிஸ்தவ, சிங்களவர்களை பயன்படுத்தி லலித் கொத்தலதவலை தேரரை கொலை செய்திருக்கின்றார். பௌத் தமதச் செல்வாக்கை குறைப்பதற்காகவே இவர் திட்டமிட்டு செயற்பட்டதாக அந்த சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிலங்காவின் தேசியத்தை சர்வதேச நாடுகளிற்கு தாரைவார்ப்ப தற்கு மறைந்த தேரர் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வந்ததாகவும் அதனாலேயே லலித் கொத்தலாவலை இந்தக் கொலையைத் திட்டமிட்டுச் செய்ததாகவும் அந்த சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த சுவரொட்டியை கண்டித்து லலித் கொத்தலாவலை அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றார். தேரரின் மறைவை சாட்டாகவைத்துக் கொண்டு பௌத்த தேசிய வாத பக்தர்கள் எனக்கூறிக்கொள்ளம் சிலர் இந்த நாட்டில் இனவாதத்தைத் தூண்டிக் களைந்து தற்போது மதவாதத்தைத் தூண்டுகின்றனர், என்று தனது அறிக்கையில் லலித் கொத்தலாவலை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இதே வேளை நத்தார் பண்டிகையை கொண்டாட வேண்டாமென பௌத்த மத நிறுவனம் ஒன்று துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளது. வெடிகளையும் வான வேடிக்கைகளையும் கைவிடுமாறும் அவ்வாறு வானவேடிக்கையில் ஈடுபடுவோர் தாக்கப்படுவார்கள் எனவும் அந்தத் துண்டுமுப்பிரசுரத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றது.பௌத்த மத குரு ஒருவர் இறந்தார் என்பதற்காக நத்தார் பண்டிகையை. கொண்டாடக்கூடாது. என்று தடைவிதிப்பதற்கு இவர்கள் யார்? என அருட்தந்தை ஜெயரட்ன டி சில்வா கேள்வி எழுப்பியிருக்கின்றார். அவ்வாறு அறிக்கை விடுபவர்கள் சிங்கள கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவதற்குக் காரணம் என்ன என்றும் அந்த அருட்தந்தை கேள்வி எழுப்பியிருக்கின்றார். இது பௌத்த அராஜகம் என்று மற்றொரு அருட்தந்தை சொல்லியிருக்கின்றார். நத்தாருக்கு முதல் நாள் 24ம் திகதி தேரரின் பூதவுடல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது. நத்தாருக்கு முதல் நாள் கொழும்பில் வானவேடிக்கைகள் இடம்பெறுவது வழமை. இம்முறையும் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே 24ம் திகதி பௌத்த கிறிஸ்தவ மோதல் ஒன்றிற்கான ஏது நிலையும் தென்படுகின்றது.

இதே வேளை தேரர் இறந்த நாளிலிருந்து சிறிலங்காவில் பௌத்த பேரினவாதம் மேற்கொண்டு வரும் எத்தகைய அராஜக நடவடிக்கைகளையும் ஜனாதிபதியோ அரசாங்கமோ இதுவரை கண்டித்ததுமில்லை. அவ்வாறு வன்முறையில் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கையும் செய்யவும் இல்லை. இத்தனைக்கும் பௌத்த பேரினவாதம் சிங்கள கிறிஸ்தவ மக்களுக்கு எதிராகவே வன்முறையில் ஈடுபடுகின்றது. இதிலிருந்து ஒன்றை அறிய முடிகின்றது. கண்டிய கலாசாரத்தைமையமாகக் கொண்ட பௌத்த பேரினவாதத்திற்கே சிறிலங்கா சொந்தம். சிங்கள கிறிஸ்தவர்களுக்கும் இல்லையென்பது தான். ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ இதுவரை காலமும் ஒரு சிங்கள கிறிஸ்தவர் பதவி வகித்து இல்லை. நாட்டின் அரசியலமைப்புக்கூட அதனைத் தெளிவாகக் கூறியிருக்கின்றது.

மறைந்த கங்கொடவில தேரர் பௌத்த மக்களுக்கு ஒரு மூத்த குருவானவர் தான். ஆனால் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள் அவ்வப்போது முறிவடைவதில் இவர் பாரிய பங்காற்றியவர் அரசியல் நெருக்கடியினால் நோர்வே தனது சமாதானப் பணியை தற்காலிகமாக இடைநிறுத்திய போது அதனை வரவேற்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியா தலையிட வேண்டும் எனக்கோரிக்கை விட்டவரும் இந்தத் தேரர்தான். 1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட போது நாடு பிரிந்து விட்டதாக் கூறி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடாத்தியவரும் இவர் தான். ஏன் 1987ல் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை வந்த போது அணி வகுப்பு மரியாதையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ராஜீவ் காந்தியை அப்போது தாக்கயிருந்தார். அந்த இராணுவ வீரர் நிரபராதியென கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தவரும் இந்தத் தேரர்தான். அந்த இராணுவ வீரரின் விடுதலைக்காக மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரோடு சண்டையிட்டவரும் இவர்தான். அது மாத்திரமல்ல மறைந்த முன்னாள் அமைச்சர்அஷரப்புடனான தொலைக்காட்சி விவாதமொன்றில் பச்சை இனவாதம் பேசியவரும் இந்தத் தேரர் தான்.

இந்தத் தேரரின் இனவாத செயற்பாடுகள் சிங்கள கிறிஸ்தவ மக்களும் தெரியாதவை அல்ல. தற்போது தங்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் கணிசமான அளவு வன்முறைகளை கருத்திற்கொண்டு தமிழ் மக்களுக்கு எதிராக இந்த பௌத்த பேரினவாதம் எத்தனை விதம் விதமான வன்முறைகளையும் அராஜகங்களையும் கட்ட விழ்த்து விட்டிருப்பார்கள். என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஜனாதிபதியும் அரசாங்கமும் பௌத்த பேரினவாதத்தை வெட்டி ஓடவதற்கு முரண்படுகிறார்களே தவிர அதனுடன் முட்டி மோதி இது ஒரு பல்லின சமூகம் வாழும் நாடு என்பதை அவர்களுக்கு ஊட்டமறுத்து வருகின்றார்கள். ஏனெனில் பௌத்த பேரினவாதத்திலே தான் அவர்களின் அரசியல் தங்கியிருக்கின்றது என்பது கண்கூடு. நல்ல வேளை தேரரின் மரணத்திற்கு ரஷயாவில் வாழும் தமிழர்கள் தான் காரணம் என்று பௌத்த பேரினவாதம் இன்னமும் கூறவில்லை. சில வேளைகளில் அடுத்து வரும் நாட்களில் அவ்வாறு பௌத்த பேரினவாதம் கூறுவதற்கான சாத்தியங்களும் உள்ளன. சில சமயங்களில் சிங்கள கிறிஸ்தவ மக்களைத் திசை திருப்புவதற்காக ரஷ்யாவில் வாழும் தமிழர்களை ஜனாதிபதியும் பிரதமரும் குற்றம் சாட்டினாலும் ஆச்சரிய ப்படுவதற்கில்லை.

நன்றி ஈழமுரசு

# அம்பாறை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பழமரக்கன்றுகள் விநியோகம்

(ஜீவா)

திருக்கோவில் செயலகப் பிரிவில் மீள்குடியேறிய தங்கவேலாயுதபுரம் கஞ்சி குடியாறு கிராமத்து சுமார் 800 குடும்பங்களுக்கு தலா இரண்டு வீதம் பலா, 'தேசிக்காய், தோடை ஆகிய நல்லின பழ மரக்கன்றுகளை அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அண்மையில் வழங்கி வைத்தது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் முரளி படையணித் தளபதி சச்சு மாஸ்டர் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதே சமயம் பிரதேச செயலகத்தினால் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திடம் கோரப்பட்ட பத்தாயிரம் மரமுந்திரிகைக் கன்றுகளுக்குப் பதிலாக அனுப்பப் பட்ட தொளாயிரம் கன்றுகளும் கஞ்சிகுடியாறு சாகாமம் காஞ்சிரங்குடா, தாண்டியடி கிராமங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்ட தாக பிரதேச செயலாளர் ஏ.கே. தவராஜா தெரிவித்தார்.

# உயிலங்குளம் விவசாயிகள் நீர் பெற்றுத்தருமாறு கோரிக்கை

(நமது நிருபர்)

மன்னார் உயிலங்குளத்திற்குட்பட்ட 300 ஏக்கர் வேளாண்மை நிலம் பட்டுப்போகும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது.

இது தொடர்பாக உயிலங்குளம் விவசாயிகள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் அ.செல்வம் அடைக்கலநாதனுக்கு கட்டுக்கரை குளத்தில் இருந்து நீர் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மன்னார் அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

## திருக்கோவில் பிரதேசமெங்கும் திருவெம்பாவை பக்தி விழா.

(ஜீவா)

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம், வெட்டுக்குள த்துப் பிள்ளையார் ஆலயம், மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் தம்பிலுவில் சித்தி விநாயகராலயம், கஞதாவளைப் பிள்ளையார் ஆலயம், சிவனாலயம், தம்பட்டை முருகனாலயம் எங்கணும் வாழை தோரணம் அமைத்து மிகவும் பக்தி பூர்வமாக திருவெம்பாவை விழா 28.12. 2003 தொடக்கம் அதிகாலை திருப்பள்ளியெழுச்சி, ஊர் சுற்றுப் பிரகாரம், திருவெம்பாவை முற்று மோதல் நிகழ்வுடன் விசேட பூஜை ஆராதனை வழிபாடுகளுடன் இடம் பெற்று வருகிறது.

இப்பக்திப் பெருநிகழ்வு,7.1.2004 அன்று பூரணை விரதம், திருவாதிரை விசேட பூஜை , உதய ஆருத்ர தரிசனம் ஆகிய சிறப்பு பூஜைகளுடன் திருவமுது பகிர்தலாகிய பாரம்பரிய சைவ சமய கலாசார பக்தி பூர்வ கொண்டாட்டத்துடன் இனிதே நிறைவேறவுள்ளது.

## தனியார் கல்விநிறுவனங்களுக்கான வேண்டுகோள்.

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தினால் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு 2004ம் ஆண்டில் கடைப்பிடிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள் சம்பந்தமான விபரம் அடங்கிய துண்டுப் பிரசுரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு:-

01. சகல வகுப்புக்களும் மாலை 6.30 மணிக்கு பின்பு நடாத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.
2. சகல வகுப்புக்களும் வெள்ளிக் கிழமைகளில் நடாத்தப்படக் கூடாது.
03. பாடசாலை நாட்களில் காலை நேர வகுப்புக்கள் யாவும் தவிர்க்கப்பட வேண்டும். (2006ல் பரீட்சைக்குத் தோற்றும் கா.பொ.த (உ.த)வகுப்பு உட்பட)
04. ஒரு கல்வி நிறுவனம் அல்லது நிலையத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வகுப்பில் இருந்து விலக்கப்பட்ட மாணவர்களை வேறு எந்த நிறுவன நிலையத்திலும் அனுமதிக்கக் கூடாது.
05. கல்வி நிலையங்களின் முன்பாகவோ அல்லது வகுப்புக்கள் முடிவடைந்து செல்லும் போதோ கூட்டமாக செல்வதை மாணவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
06. மேற் கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய 01.01.2004 முதல் தங்கள் நிறுவன நிலையங்களை நடாத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(குறிப்பு:- நிறுவனம் ரியூட்டறிகளையும், நிலையம் வீடுகளில் நடாத்தும் வகுப்புக்களையும் குறிக்கும்.)

## கிரான் வீதி விபத்தில் இருவர் படுகாயம்

(யுவராஜ்)

மட்டக்களப்பு கிரான் பிரதான வீதியில் ஏற்பட்ட வாகன விபத்தில இருவர் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மு.ப. 10.15 மணியளவில் கல்முனையிலிருந்து கதுருவெல நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பயணிகள் பஸ் வண்டி கிரான் பிரதான வீதியில் அமைந்துள்ள தடாகம் அலுவலகக் கட்டிடத்தில் மோதிய போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்துத் தொடர்பாக தடாக ஊழியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் நாங்கள் ஊழியர்கள் சிலர் தடாகம் முன்பாக கதைத்துக் கொண்டிருந்த வேளையில் பிரதான வீதியால் வந்து கொண்டிருந்த பஸ் வண்டி திடீரென எமது கட்டிடத்தினை நோக்கி வந்ததைக் கண்ட நாங்கள் தெய்வாதீனமா கத்தப்பி விட்டோம். எங்களைக் கடந்து பஸ் வண்டி கட்டிடத்தில் மோதியது என்றார்.

இச் சம்பவத்தில் பஸ் வண்டி சாரதியும், பயணிகளில் ஒருவருமே காயமடைந்தவர்களாவர். இது தொடர்பாக வாழைச்சேனை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## வெள்ளாவெளி பிரதேச இந்து ஆலயங்களுக்கு நிதி உதவி.

(எம்.யுவராஜ்)

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை) எம். பி. அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வெல்லாவெளிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இந்து ஆலயங்களுக்கு 150,000 ரூபா பெறுமதியான பூசை உபகரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன் தினம் பாலையடிவட்டையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பாலையடி வட்டை, கூழாவடி, நெல்லிக்காடு, காக்காச்சிவட்டை, விவேகானந்தபுரம், பலாச்சோலை, நெடியவட்டை, விளாந்தோட்டம், ஆகிய இந்து ஆலயங்களுக்கு ஆலய பரிபாலான சபைத் தலைவர்களிடம் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஷ்ணபிள்ளை, விடுதலைப் புலிகளின் மாவடி முன்மாரிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் சுதா, பாலையடி வட்டை பிரதேச பொறுப்பாளர் தீபன் மற்றும் பல பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு

(அரியன்)

ஆசிரியர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் போட்டிப் பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு பரீட்சைக்கான கருத்தரங்குகளை நடாத்த மட்டக்களப்பு மாவட்ட கல்வி அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் கல்வி அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் சி. எம். குமாரசாமியுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

## ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாராட்டு வைபவம்!

(அரியம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பிரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களை பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் தெரிவு செய்து அந்த மாணவர்களையும், அவர்களுக்கு கல்வியூட்டிய பாடசாலை ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வை மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் நடாத்தவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கல்வி அபிவிருத்திச் சங்க செயலாளர் சி. எம் குமாரசாமி தமிழ் அலைக்கு தெரிவித்தார்.

## நாகேந்திரன் மறைவுக்கு அனுதாபம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா வலயத்தில் ஆசிரியராக அதிபராக கல்வி அதிகாரியாக கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.சி. நாகேந்திரம் அவர்களின் மறைவு கல்வி சமூகத்தில் ஓர் இழப்பாகும், கல்வி வரலாற்றில் தனக்கென தனித்துவமான முறையில் ஆசிரியர் களையும் அதிப்ர் களையும் இன் முகத்துடன் அன்பாக அரவணைத்து கல்வி அதிகாரியாக தொழிற்பட்ட ஒருவர். ஆசிரியர்கட்கு ஆறுதல் கூறி யும் அன்பாகக் கதைத்தும் ஆலோச னைகள் வழங்கியும் நற்பெயரை பெற்று செய்பட்ட ஒருவர். ஓய்வு பெற்ற பின்பும் கல்வி சமூகத்தினால் மதிக்கப்பட்ட ஒருவர். கோபம் கொள்ளாது அன்பாக தனது பணியினை ஆற்றியவர். இவரின் மறைவுக்கு மட்டக்களப்பு தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த ஆனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது.

## புத்தாண்டு விருந்தில் கைகலப்பு

(ஜீவா)

திருக்கோவில் செயலகப் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் சமூர்த்தி வங்கிக்கிளை அலுவலகத்தில் புதுவருடப் பிறப்பு தினத்தன்று அலுவலகக் கடமைகளை பி.ப கல் ஒரு மணியுடன் இடைநிறுத்தி இனிய பாடல் இசைப்புடன் மதுக்கேளிக்கைகளுடன் வங்கிச் சங்க ஊழியர், பிரதேச செயலாளர், செயலகஅதிகாரிகள் கலந்து கொண்ட விருந்துபசாரத்தை பார்வையிடச் சென்ற பொது மகன் மது அருந்தியிருந்தவர்களால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் 1ம் திகதி இடம் பெற்றுள்ளது.

கடமை நேரத்தை உதாசீனம் செய்தது மட்டுமன்றி திறந்த வெளியான கட்டிடத்தில் மிகுந்த கேளிக்கைகளுடன் நடந்த இந் நிகழ்வைப் பார்க்கச் சென்ற பாமரனுக்கு படித்தவர்கள் ஒன்றுகூடி அடித்துத் துன்புறுத்தியதுடன் விடுதலைப்புலிகளுடன் முறையிடுவதால் எவ்வித பலனுமில்லை. என எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொங்கு தமிழ் பிரசாரம் இன்று முதல் ஆரம்பம்

(நமது நிருபர்)

பொங்கு தமிழ் நிகழ்வையொட்டி மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பரந்த அளவிலான பிரசாரங்களை இன்று முதல் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் சமூகம், கல்வியியல் கல்லூரி மாணவர் சமூகம் அசிரியர் பயிர்ச்சிகல்லூரி மாணவர்கள் சமூகம் என்பன இணைந்து மேற்கொள்ளவுள்ளதாக பொங்கு தமிழ் அமைப்புக்கு தெரிவித்தனர். ஒலிபெருக்கி மூலம் கிராமம் கிரமமாக பிரச்சாரம் செய்தும், வீடு வீடாய் சென்று பிரசாரங்களை மேற் கொள்ளுவதும் மற்றும் சுவரொட்டிகள் பாதைகள், துண்டுப்பிரசுதங்கள் என பல் வேறுபட்ட பிரசாரங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்.

## 10ம் தர மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும

(அரியம்)

கிழக்குப்பல்கலைக்கழக விளையாட்டு முற்றத்தில் எதிர் வரும் ஜனவரி 21ம் திகதி இடம் பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலுள்ள 10ம் வகுப் புக்கு மேற்பட்ட பாடசாலை மாண வர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும் என நேற்று முன்தினம் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் இடம் பெற்ற ஏற்பாட்டுக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கியதாக இடம் பெறவுள்ள இப்பொங்கு தமிழ் நிகழ்வுக்காக விசேட போக்கு வரத்துக்களை நீயூ ஈஸ்டன் பஸ் கம்பனி, தனியார் பேருந்து உரிமையாளர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

## இரங்கல் செய்தி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழீழ மாவட்ட நீதிமன்றின் குற்றவியல் நீதியாளரின் தாயாரானகன்னன்குடாவைச் சேர்ந்த திருமதி உமையாத்தை அவர்களின் மறைவையொட்டி பட்டிப்பளை தமிழீழ நீதிமன்றில் பணிபுரியும் பணியினர்கள் இரங்கல் செய்தியினை அன்னாரின் குடும்பத்திற்கு அனுப்பியுள்ளனர். தாயாரின் இறப்பால தவிக்கும் குடுபதினரின் துயரத்தில் தாம் பங்கு கொண்டு அன்னாரின் அத்மாசாந்தியடைய பிரார்த்திப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## காரைதீவு புதிய வைத்திய அதிகாரி

(ரவீந்திரன்)

காரைதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலையின் புதிய வைத்திய அதிகாரியாக டாக்டர் திருமதி பகிரதி தமிழ் வண்ணன் நேற்று பதவிகளைப் பொறுப்பேற்றார். யாழ்ப்பாணப் பல்கலை கழகத்தில் மருந்துவமாணிப் பட்டம் பெற்ற இவர் பல வருட அனுபவத்துடன் பிறந்த மண்ணில் தொடர்ச்சியாகக் கடமை புரிய முன்வந்த டாக்டராவார் காரைதீவுக் கிராமத்தில் கடந்த சில வருடங்களாக அங்குள்ள வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறையால் கவனிப்பாரற்ற நிலையில் பராமரிக்கப்படாமல் இருந்த வைத்தியசாலைக்கு கடந்த சில மாதங்களுக்குள் 3 டாக்டர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.பலகிராமங்களுக்கு மத்தியில் ஒரே ஒரு டாக்டராக பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் கதிர்காமர் மகேசனின் சேவையும் பாராட்டதக்கதென பொது மக்கள் தெரிவிக்கின்ற அதே வேளையில் சொந்த மண்ணில் பிந்த மண்ணில் கடமை புரிய முன்வந்த டாக்டர் திருமதி தமிழ் வண்ணனுக்கு காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். இராமகிருஸ்ணர் உட்பட கிராம மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.


# தம்பிலுவில் கிராமத்தில் தனியிடம் பிடித்த குருகுலம்


திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் கிராமத்தில் தனக்கென்றே தனி இடம் ஒன்றை உருவாக்கி மதம், மொழி, பேதமின்றி பெற்றோரை இழந்து படிப்பைத் தொடர முடியாமல் தத்தளிக்கும் அப்பாவிச் சிறுவர்களுக்கு



அடைக்கலமும் அடிப்படைக் கல்வியில் இருந்து பல்கலைக்கழகம் வரை கல்வி புகட்டியும் நல்ல பழக்க வழக்கங்களையும், போதித்து. இன்று இப்பிரதேசத்தின் ஒளிச் சுடராகச் செயல்படும் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் இற்றைக்கு 24வருடங்களுக்கு முன்பே ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஸ்தாபகர் இறை பணிச் செம்மல் சுவாமிநாதர் தம்பையா அடிகளார் ஆவார். (06.01.78) ஆரம்பகாலத்தில் ஓலைக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இக்குருகுலம் தற்போது பிரமாண்டமான கட்டிடங் களுடன், வீறு நடை போடுகின்றது. இந்துக்களின் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விரதங்கள், நடைமுறைகள் அனைத்தையும் திறம்பட நடாத்தி வருகின்றனர். தற்போது இதன் முகாமைத்துவப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை இராசரெத்தினம் சகல வழிகளிலும் தொடர்புகளை ஏற்படுத்தி மக்களின் பங்களிப்புடன் 24வருடங்களாக செயல்படுத்தி வருவது பாராட்டத்தக்க விடயமாகும். இக்குருகுலம் ஆரம்பிக்கும் காலத்தில் 10-12 குழந்தைகளுடனே ஸ்தாபிக்கப்பட்டது. இன்று 47பேருடன் செயற்படுவதுடன் பல தொண்டாற்றியும் சமூகப் பணிகளையும் முன்னின்று நடாத்துகின்றனர். குறிப்பாக உகந்தை முருகன் ஆலயத்தில் நடைபெறும் உற்சவங்களில் உழவாரப் படையாளி என்ற தாரகமந்திரத்துடன் சரிகைத் தொண்டையும் அன்னதானப் பணிகளையும் செய்து கால் நடையாகக் கதிர்காமம் செல்லும் அடியார்களுக்கு உணவழித்தும் குடிநீர் வசதிகளையும் வருடா வருடம் நடைபெற்று வரும் திருவெம்பாவைத் தீர்த்த ஆருத்திரா தரிசனம் இம் முறையும் இங்கு வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் குழந்தைகளைப் பராமரிக்கும் வீரமுனை சீர்பாததேவியார் ஆச்சிரமம், அக்கரைப்பற்று விபுலானந்தா இல்லம் ''அம்மன் மகளிர் இல்லம்'' தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் போன்றவைகள் தங்களால் இயன்ற உதவிப் பணத்துடன் பொது மக்களின் பங்களிப்புடனும் அரசாங்கத்தின் சமூக சேவைத் திணைக்களத்தின் கணிசமான





உதவிகளுடனும் இக்குருகுலத்தின் நிருவாக அங்கத்தவர்களின் பக்கபலத்துடன் இன்று பலரும் போற்றக் கூடியவகையில் செயல்படுகின்றது. திருவெம்பாவைத் தீர்த்தத்திற்கு திருநாவுக்கரசு நாயனார். குருகுலம் ஆருத்திரா தரிசனம் என்ற இறுதி நிகழ்வுடன் 07.01.2004 நிறைவு பெறுகின்றது. ஆருத்திரா தரிசனம் தொடர்பாக முகாமைத்துவ பணிப்பாளரிடம் வினாவியபோது அழகாக சிறந்த விளக்கமாக விஞ்ஞானம் கூறிய உண்மையையும், அஞ்ஞானம் கூறிய தத்துவங்களையும் விளக்கியதுடன் நந்தி தேவனின் இரு கொம்புகளின் இடைவெளி ஊடாக சிவலிங்கத்தை நோக்குவதே ஆருத்திரா தரிசனம் என்பதுடன் அத் தரினசமே முக்கியமான பேறைத் தருவ தாகவும் தனது தீர்மானத்தை முன்வைத்தார். அத்தோடு சமூக சேவைத் திணைக்களம் 17மாணவர்களுக்கு மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 300 ரூபா வீதம் வழங்கியதாகவும் எஞ்சியவர்களுக்கு பொது மக்களின் பங்கு மூலமே செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

# மார்கழி மாதமும் திருவாதிரை தரிசனமும்

''மாஷானாம் மார்க சீர்ஷோஹம்'' மாதங்களிலே நான் மார்கழியாக இருக்கின்றேன் என்று கண்ணன் கீதையிலே கூறியிருக்கிறான். இதனால் மார்கழி மாதத்தின் சிறப்புப் பற்றி நாம் சந்தேகமின்றி தெரிந்து கொள்ளலாம்.

தாருகாவன முனிவர்கள் தர்ம மார்க்கமே உலகில் சிறந்ததென்று ஞான மார்க்கத்தையும், சிவனையும் நிந்தித்து புறந்தள்ளி மாபெரும் வேள்வியினைச் செய்து சிவனை அழிக்க நினைத்தனர். அப்போது சிவன் பிஷாடனர் வடிவம் கொண்டு அம்முனிவர்களிடம் பிச்சை ஏற்றுவர அவரின் அழகில் மயங்கிய முனிபத்தினிகள் அவர் பின் தொடர்ந்தனர். இவற்றைக் கண்ட முனிவர்கள் கோபம் கொண்டு வேள்வித்தீயிலிருந்து மதங்கொண்ட யானை, டமருகம் (உடுக்கு) பாம்பு, மான், தீப்பிளம்பு, முயலகன் எனும் அரக்கன் என்பவற்றைத் தோற்று வித்து சிவபெருமான் மீது ஏவினர். அவர் அவைகளை அடக்கி யானையை உரித்துப் போர்த்தும் முயல் களை வீழ்த்தி வலது காலை அவன் மீது ஊன்றி இடது காலைத் தூக்கி பாம்பைக் கழுத்தில் மாலை யாக அணிந்தும், தீ உடுக்கு மான் என்பவற்றை கையிலே ஏந்தியும் நர்த்தனமாடி முனிவர்களுக்கு உண்மைப் பொருளை உணர்த்திய நாளே திருவாதிரை நாளாகும்.

மார்கழி மாதம் தேவர்களுக்கு புலர் காலைப் பொழுது இறைவனை வணங்குவதற்கு மன ஒடுக்கமும், அமைதியும் கிடைக்கின்ற நேரமிது. இதனை பிரம்ம முகூர்த்தம் என்பர். சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாளிகைக்கு முன் இவ்வேளையில் தேவர்களும், முனிவர்கள் யாவரும் சிவனைப் பூசை செய்து வழிபடுகின்றனர். நாமும் சிவனை வழிபட மார்கழி மாதம் மிகச் சிறந்தது. மார்கழி மாதத்தில் ஒரு நாள் வழிபாடு செய்தவர்கள் ஒருவருடப் பூசை செய்த பலனை அடைவர். இம்மாதம் பூசை வழிபாட்டிற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டமையால் நமது லௌகீக வாழ்வுக்கு சுபகருமங்கள் விலக்கப்பட்டுள்ளது. இதனையறியாதோர் மார்கழி மாதம் என்றால் பீடை மாதம் என்று கூறுகின்றனர்.

இது திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடிய விரதமும் விழாவுமாகும். ஆதிரையான் என்பது சிவனைக் குறிக்கும் சொல். இவ்நட்சத்திரம் சிவந்த நிறமுடையது சூரியனை விடவும் பல கோடி மடங்கு பெரியது தமிழில் இதனைச் செம்மீன் என்பர். இத்தன்மைகளால் சிவனுக்குரியதாக பெரியோர் கைக்கொண்டனர். மார்கழி மாத திருவாதிரையை இறுதியாகக் கொண்டது திருவெம்பாவை விரதமும் விழாவும் இவ்விரதம் சதய நட்சத்திரத்தில் தொடங்கி திருவாதிரையுடன் நிறைவு பெறும். பத்து நாட்கள் கொண்ட விரதமாகும். சில வருடங்களில் நாட்களை விட நட்சத்திரங்கள் கூடிய நேரத்திற்கு இருப்பதால் நாட்களில் வித்தியாசம் வருவதுண்டு. முற்காலத்தில் கன்னிப் பெண்கள் மார்கழி மாத கூதல் குளிரையும் பொருட்படுத்தாது அதிகாலையில் எழுந்து நீராடிச் சிவனை வழிபட வீடு வீடாகச் சென்று ஏனைய பெண்களையும் அழைக்கின்றனர். இதனை 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசக சுவாமிகள் தென்னாட்டிலுள்ள திருத்தலங்கள் தோறும் யாத்திரை சென்று சிவனை வழிபட்டு திருவாசகப் பாடல்களைப் பாடி திருவண்ணாமலைக்கு வந்திருந்தார்.

அதேநேரம் மார்கழி மாத திருவெம்பாவைக் காலமாதலாம் அக்கிராமத்திலுள்ள கன்னிப் பெண்கள் ஒவ்வொருவரும் காலை நான்கு மணிக்கு எழுந்து வீடுகள் தோறும் சென்று பெண்ணே நீர் இன்னும் நித்திரை விட்டு எழும்பவில்லையா? கோழிகள் கூவுகின்றன. குயிலினங்கள் விடியலைக் கண்டு சந்தோச மிகுதியினால் பாடுகின்றன. இவற்றை அறியாது இன்னும் தூங்கிக் கொண்டு இருக்கின்றாயே உனக்கு வெட்க மில்லையா? வாள் போன்ற கண்ணை உடையவளே நேற்று நீ என்ன சொன்னாய். நானே வந்து உங்களை எழுப்புவன் என்றாயே, என்று வந்தவர்கள் கூற உள்ளே

*கி.இரத்தினசிங்கம்*
*முனைக்காடு.*

நித்திரை செய்பவள் நம் தோழிகள் எல்லோரும் வந்து விட்டார்களா? என்று வினாவுகிறாள். ''அதற்கு மற்றவள் சந்தேகம் என்றால் நீயே வந்து எண்ணிப் பார்த்து விட்டு குறைந்தால் மீண்டும் போய்த் தூங்கு என்று பேசுகின்றாள். இந்த சம்பாஷனைகள் எல்லாவற்றையும் நேரிலே கண்ட மாணிக்கவாசகர் அவர்களுடைய கிராமியப் பாணியில் அமைந்த சொற்களைக் கொண்டு கருவாக அமைத்து திருவெம்பாவை எனும் பெயரில் திருவாசகம் பாடியுள்ளார். இதிலுள்ள சொல் நயம் பொருட்செறிவு எல்லாமே அற்புதம். இன்னும் அப் பெண்கள் சிவனிடம் வேண்டுகிறார்கள் எங்கொங்கை நின் அன்பர் அல்லாதோர் சேரற்க'' எம் கையுனக்கல்லாம் எப் பணியும் செய்யற்க என்று கேட்கின்றனர். இதனால் இவற்றை பாவையர் நோன்பு என்றும் கொள்வர். பாவையர் தமக்கு நல்ல கணவனை வேண்டியும். நாட்டில் மழை பெய்து வளம் சிறக்கவும் மார்கழி நீராடி அதிகாலைப் பொழுதில் குளக்கரை சென்று மணலால் சிவ உருவம் செய்து விளையாடி வழிபாடு செய்தனர். இதுவே நாம் இன்று கைக்கொள்ளும் திருவெம்பாவை விழாவாகும். ஆலயங்களில் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை மட்டும் பாடி ஏனைய திருமுறைகளை அக்காலத்தில் காப்பிட்டு வைப்பது நீண்ட நாள் வழக்காக உள்ளது. இது திருவாசகத்தினுடைய பெரும் புகழை எமக்குக் காட்டுகிறது.

வருடம் தோறும் வருகின்ற சிதம்பர நடேசர் அபிஷேகங்கள் ஆறிலும் மார்கழி மாதம் இரவில் அபிஷேகமும் உதயத்தில் தட்ஷணமும் நடைபெறும். இதுவே ஆருத்திரா தரிசனம் எனப்படும். ஆருத்திரா என்பது திருவாதிரை நட்சத்திரத்தை குறிக்கும் சொல்லாகும். இந்நாளிலே இறைவன் பல அற்புதங்களை நிகழ்த்தி அடியவர்களுக்கு அருள் புரிந்துள்ளார். சேந்தனார் என்ற சிவ பக்தர் திருவமுது கொடுப்பதை சிவதொண்டாகக் கருதி அடியவர்களுக்கு அமுது பரிமாறி பசிபோக்கி வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் தொடர்ந்து பல நாட்கள் விடா மழை பெய்து வந்ததால் உணவளிக்க வசதியற்று இருந்த பொழுது அவரைச் சோதிக்க இறைவன் கிழவ வேடம் தரித்து வந்து உணவு தருமாறு வேண்டினார். அப்போது சேந்தனார் தம்மிடமுள்ள மாவில் களிக்கிண்டிக் கொடுத்தார். அதனை உண்டு மகிழ்ந்த கிழவர் தன்னை வெளிப்படுத்தி அடியவருக்கு அருள்புரிந்த நாளும் திருவாதிரை நாளேயாம். இதன் காரணமாகவே இன்றும் நமது ஆலயங்களிலும் திருவாதிரைக் களி முக்கிய நிவேதனமாக வைக்கப்படுகிறது. களி என்றால் மகிழ்ச்சி என்று பொருள். இத்தினத்திலே சிதம்பர நடராஜனுடைய திருத்தாண்டவத்தைக் கண்டு களிக்க வேண்டிய நந்தனாருக்கும் பெரும் பேறளித்த ஜோதியோடு கலந்து கொண்டு பிறவா முக்திப் பேறு பெற்றதற்கும் காரணமாய் அமைந்தது. மார்கழி மாதத் திருவாதிரைத் தரிசனமே ஆகும். மார்கழி மாதம் தஷிணாயத்தின் முடிவும் உத்தராயணத்தின் ஆரம்பமும் மேலும் விஷேசமாக வைஷ்ணவர் களுடைய சொர்க்க வாயில் ஏகாதசி அல்லது வைகுண்ட ஏகாதசி விரதமும் இம் மார்கழி மாதத்திலே தான் வருகிறது. இந்த மாத ஏகாதசி விரதங்களைக் கொண்டவர்களை கண்ணன் தமது வைகுண்டத்தில் வைக்கின்றான் என்பது வைஷ்ண வர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இன்னும் யேசு பாலனும் மார்கழி மாதத்தில் தான் பிறந்தான். இந்தப் பெருமைகளையெல்லாம் நாம் உணர்ந்து கொண்டால் மார்கழி மாத வழிபாடும் தர்சன மும் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்று தெரிந்து கொள்ளலாம்.

எனவே ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை நாமும் பாடி பதஞ்சலியும் வியாக்கிருதரும் பெற்ற சிதம்பரேஸ்வரனுடைய பாதார விந்தங்களைப் பெற மார்கழி மாதத்தில் திருவாசகமேந்தி வழிபாடு செய்து நாடு நன்மை பெற நாமும் வீடு பெற சபா நாதனை தர்சனம் செய்வோமாக.


திருச்சிற்றம்பலம்.

# இந்தியா பாகிஸ்தான் உறவில் மேலும் ஒரு திருப்பம்!

இந்தியா - பாகிஸ்தான் உறவில் புதிய திருப்பமாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை பிரதமர் வாஜ்பாய் சந்தித்துப் பேசினார். உலக நாடுகள் அனைத்தையும் கவர்ந்து இழுத்துள்ள இந்த சந்திப்பு சுமார் ஒருமணி நேரம் நடைபெற்றது.

கடந்த 2001-ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் உறவை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்காகவும் இரு நாடுகளுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளை தீர்த்துக் கொள்வதற்காகவும் ஆக்ராவில் இந்திய-பாகிஸ்தான் உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் இந்திய பிரதிநிதிகளும் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தலைமையில் பாகிஸ்தான் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பிறகு வாஜ்பாயும் முஷாரப்பும் தனியாகவும் சந்தித்துப் பேசினர். ஆனால் இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. இதனால் இருநாடுகளுக்கும் இடையே எந்தவிதமான உடன்பாடும் ஏற்படவில்லை.

அதன்பிறகு கடந்த 2001-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் தேதி அமெரிக்கா மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்தும், அதே ஆண்டு டிசம்பர் 13-ம் தேதி இந்திய பாராளுமன்றத்தின் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்தும் இந்தியா- பாகிஸ்தான் நட்புறவில் திடீர் விரிசல் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து இரு நாட்டு உறவுகளும் துண்டிக்கப்பட்டன.



எல்லையில் பதட்டம் ஏற்பட்டு இருநாட்டுப் படைகளும் குவிக்கப்பட்டன. அந்த நேரத்தில் அதாவது 2002-ம் ஆண்டு நேபாள தலைநகர் காத்மண்டில் 11-வது சார்க் உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பும், பிரதமர் வாஜ்பாயும் கலந்து கொண்டனர்.

இந்தியா-பாகிஸ்தான் உறவுகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இந்த சார்க் மாநாடு நடைபெற்றதால் முஷாரப்பு- வாஜ்பாய் சந்திப்பு நடக்குமா ? என்பது கேள்விக்குறியாக இருந்தது.

ஆனால் சார்க் மாநாட்டு மேடையிலேயே பிரதமர் வாஜ்பாயை சந்தித்து பர்வேஸ் முஷாரப் கைகுலுக்கி அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தினார். ஆனால் இருவரும் தனியாக சந்தித்துப் பேசவில்லை.

பிறகு 2002-ம் ஆண்டு பிற்பகுதியில் காஷ்மீர் மாநிலத்திற்குச் சென்ற பிரதமர் வாஜ்பாய் ஒரு கூட்டத்தில் பேசுகையில் பாகிஸ்தானுடன் மீண்டும் உறவை ஏற்படுத்திக்கொள்ள நல்லெண்ண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்.

இதனையடுத்து எல்லையில் பதட்ட நிலை ஓரளவு தணிந்தது. துண்டிக்கப்பட்ட தூதரக உறவுகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. இதனையடுத்து சில காலம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த பஸ், ரயில், விமான போக்குவரத்துக்களும் மீண்டும் துவக்கப்பட்டன. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்று இருக்க வேண்டிய தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (சார்க்) உச்சி மாநாடு இந்த ஆண்டு நடைபெறுகிறது.



கடந்த ஆண்டு சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்த இந்தியா இந்த ஆண்டு சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள முடிவு செய்தது. அதன்படி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லா மாபாத்தில் நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் வாஜ்பாய் கடந்த 3-ம் தேதி இஸ்லாமாபாத் சென்றார்.

டெல்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்பு பாகிஸ்தான் தலைவர்களை சந்திக்கமாட்டேன் என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்து இருந்தார்.

என்றாலும் இஸ்லாமாபாத் சென்ற பிறகு பிரதமர் வாஜ்பாய் தனது மனநிலையை மாற்றிக் கொண்டார். சார்க் மாநாட்டை துவக்கி வைத்து பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி காஷ் மீர் பிரச்சினையை கிளப்பாமல் அரசியல் கருத்து வேறுபாடுகளை நீக்கிக்கொள்ளலாம் என்று பேசியது வரவேற்கத்தக்கதாக இருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் பாகிஸ்தான் பிரதமர் ஜமாலியை வாஜ்பாய் சந்தித்துப் பேசினார். இது இந்தியா - பாகிஸ்தான் உறவில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

அதன்பிறகு தெற்காசிய நாடுகளின் தலைவர்களுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் அளித்த விருந்திலும் பிரதமர் வாஜ்பாய் கலந்துகொண்டார். அப்போது வாஜ்பாயும், முஷாரப்பும் கைகுலுக்கிக் கொண்டனர். இதுவும் வரவேற்க த்தக்க ஒரு அம்சமாக இருந்தது.

இந்த நிலையில் வாஜ்பாயும் முஷாரப்பும் தனியாக சந்தித்துப் பேசுவார்களா ? என்ற ஆர்வம் சர்வதேச நாடுகள் மத்தியில் இருந்து வந்தது. இந்த சஸ் பென்சை முறியடிக்கும் வகையில் அனைவரையும் திகைக்க வைக்கும் வகையில் நேற்று பிரதமர் வாஜ்பாய்- முஷாரப் சந்திப்பு நடைபெற்றது. பாகிஸ்தான் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பு சுமார் ஒருமணி நேரம் நடைபெற்றது.

தனது மாளிகைக்கு வந்த இந்தியப் பிரதமர் வாஜ்பாயை தனக்கே உரிய பாணியில் முஷாரப் கைகுலுக்கி அன்புடன் வரவேற்றார். இருவரும் நலம் விசாரித்தபடியே பேச்சு நடத்தவிருக்கும் அறைக்குச் சென்று இருநாட்டு தேசியக் கொடிகளும் இடையே இருக்க அவற்றின் வலதுபுறமும் இடதுபுறமுமாக இருவரும் அமர்ந்து போட்டோவுக்கும், வீடியோ கேமிராவுக்கும் போஸ் கொடுத்தனர்.

இந்த சந்திப்பின் போது இந்திய தரப்பில் வெளியுற வுத்துறை அமைச்சர் யஷ்வந்த் சின்கா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஸ் மிஸ்ரா, வெளியுறவுத்துறை செயலாளர் சசாப், பாகிஸ்தானுக்கான இந்தியத்தூதர் சிவசங்கர் மேனன் ஆகியோர் உடன் இருந்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷீத் முகம்மது கசூரி, ஜனாதிபதிக்கான தலைமை ராணுவ அதிகாரி ஹமீது ஜேவத், வெளியுறவுத்துறை செயலாளர் ரியாஸ் கோக்கர், இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அஜீஸ் அகமதுகான் ஆகியோர் உடன் இருந்தனர்.

வாஜ்பாய்- முஷாரப்பின் இந்தச் சந்திப்பு மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று கூறினாலும் இருநாடுகளைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கியமான சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதம் குறித்து வாஜ் பாய்-முஷாரப் சந்திப்பின்போது பேசப்பட்டு தீவிரவாதிகளின் தாக்குதல்கள் குறித்து முஷாரப்பிடம் வாஜ்பாய் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

இதேபோல காஷ்மீர் பிரச்சினை குறித்தும் இவர்கள் இருவரும் விவாதித்ததாகக் கூறப்படுகிறது. இருதலை வர்களும் விரிவான விவாதம் நடத்தியதாகவும் அப்போது காஷ்மீர் பிரச்சினை பற்றியும் பேசப்பட்டது என்றும் பாகிஸ்தான் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

## உலகச் செய்திகள்

# தூதரக அதிகாரிகள் எண்ணிக்கை அதிகரிக்க கோரிக்கை!

இந்தியா-பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும், இதற்கான நடவடிக்கைகளை இரு நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் வாஜ்பாய் கூறினார்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே கடந்த சில மாதங்களாக தூதரக உறவுகள் மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றன. இஸ்லாமாபாத்தில் இந்தியத் தூதராக சிவசங்கர மேனன் இருந்து வருகிறார். டெல்லியில் பாகிஸ்தான் தூதராக அஜீஸ் அகமது கான் இருந்து வருகிறார்.



இந்த இரு தூதரகங்களிலும் உள்ள பணியாளர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க வே ண்டும் என்றும், அதற்கான நடவடி க்கைகளில் இறங்க வேண்டும் என்றும் பிரதமர் வாஜ்பாய் கூறியுள் ளார்.

நேற்று இஸ்லாமாபாத்தில் இந்திய தூதரக வளாகத்தில் குடியிருப்பு காம்ப்ளக்ஸ் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டி பேசுகையில், வாஜ்பாய் மேற்கண்டவாறு கூறினார். இரு நாடுகளுக்கும் இடையே அதிகமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். இரு நாடுகளுக்கும் இடையேயான தகவல் தொடர்புகள் நீடிக்க வேண்டும். நம்மிரு நாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்துக் கொள்ள வேண்டும். 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படும் இந்த குடியிருப்பு மூலம் இருநாட்டு உறவுகள் அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறி னார்.

# பாகிஸ்தானில் கிறிஸ்தவ பாதிரியார் முஸ்லிம் தீவிரவாதிகளால் சுட்டுக் கொலை!

பாகிஸ்தானின் மத்திய பகுதியில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் அடையாளம் தெரியாத சிலரால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தானின் மத்திய பகுதியிலுள்ளது கானேவால் நகரம். இந்த நகரத்தின் ரயில் நிலையத்திற்கு ஒரு கிறிஸ்தவ பாதிரியார் முத்தார் மாஸ்ஸி என்பவர் வந்தார். அவர் ரயிலை பிடித்து லாகூருக்கு செல்ல வந்தார். பாதிரியார் ரயில் நிலையத்திற்கு வந்தபொழுது அடையாளம் தெரியாத ஒருவரால் சுடப்பட்டார்.

பாதிரியார் மீது 3 குண்டுகள் பாய்ந்தது. பாதிரியார் அதே இடத்தில் இறந்தார். இந்த கொலைக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை. பாகிஸ்தானில் கிறிஸ்தவர்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் 3 சதவீதம் பேர்தான் வாழ்கின்றனர்.

இந்த சம்பவம் முஸ்லிம் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் தலிபன் அரசுகள் கவிழ்க்கப்பட்டதற்கு பின்பு கிறிஸ்தவ சர்ச் ஒன்றில் நடந்த தாக்குதலில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சந்திப்பை ரஸ்யா வரவேற்கிறது

இஸ்லாமாபாத்தில் நடைபெறும் சார்க உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் சென்று பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி, ஜனாதிபதி முஷாரப் ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார். இதனை ரஷ்யா வரவேற்றுள்ளது. புதுடெல்லியும், இஸ்லாமாபாத்தும் பிரச்சனைகளை முழு அளவில் பேசித்தீர்த்துக் கொள்வதோடு, நல்ல அண்டை நாட்டினராக மாறி தெற்காசிய பகுதியில் அமைதியும், ஒற்றுமையும் ஏற்படபாடுபடவேண்டும் என்றும் ரஷ்யா கேட்டுக் கொண்டுள்ளது.

பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தான் ஜனதாபதி முஷாரப்பும் 12-வது சார்க் மாநாட்டில் கலந்து வளர்வதை வரவேற்பதாகவும், இப்பேச்சுவார்த்தையில் சுமூகமான முடிவுகள் ஏற்படவேண்டும் என ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். சிம்லா, ஒப்பந்தம் மற்றும் லாகூர் ஒப்பந்தம் அகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சார்க் மாநா



ட்டை பயன்படுத்தி முழு அளவில் பேச்சுவார்த்தை நடத்தி அனைத்துப பிரச்சனைகளும், சுமூகமான முடிவு தான் இரு நாட்டு தலைவர்களும் வழிவகை செய்யவேண்டும். தெற்காசிய பகுதிகளில் வழிவகை செய்யவேண்டும். தெற்காசிய பகுதியில் அண்டைநாடுகளாக இந்தியாவும் பாகிஸ்தானும் திகழவேண்டும் என்றும் தனது செய்தியில் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# இரத்த அழுத்த நோய்க்கு தீர்வு உண்டா?

இன்றைய அவசர உலகில் பெரும்பாலான மக்களை பாதித்து, ஒருவித பயத்தை ஏற்படுத்தும் நோய்களில் ஒன்றுதான் இரத்த அழுத்த நோய். (Hypertension & Hpotension) இரத்த அழுத்த நோயில் உயர் இரத்த அழுத்தம் மிக அதிக அளவிலான பாதிப்புக்களை உண் டாக்குகிறது.

உயர் இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள், மற்றவர்களைக் காட்டிலும் மூன்று பங்கு அளவில் இதய நோய்க்கு ஆளாகிறார்கள். மேலும் மற்றவர்களைக் காட்டிலும் மாரடைப்பு நான்கு பங்கு அதிகமாக உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் நாளுககு நாள் மிக வேகமாக பரவி வரும் நகர வாழ்க்கை கலாச்சாரம் மற்றும் முக்கியமான நம் சித்தர்கள் நமக்கு அளித்துள்ள நோய் அணுகா விதிகளை, வாழ்க்கை நெறிமுறைகளை நாம் மறந்து விட்டது என்று கூறலாம்.

சித்த மருத்துவ முறையில் ஒரு நோய் ஏற்பட முதன்மையான காரணம் மனம் என்று கூறப்பட்டிருக்கிறது. மனதில் தோன்றும் குழப்பங்கள், தீவிர சிந்தனைகள் (Stress, Rapid thin king) இவைதான் நோய் ஏற்பட முக்கிய காரணங்கள். அதிலும் இரத்த அழுத்த நோய் ஏற்படுவதற்கு முதல் காரணமே மனோ விகாரங்கள் தான். எனவேதான் சித்த மருத்துவ முறையில் மனதை அமைதிப்படுத்த எண்ணெய்க் குளியல் மற்றும் இயமம்(சொல் தூய்மை), நியமம் (செயல் தூய்மை), ஆசனம் (இருக்கை நிலை), பிரணாயாமம் மூச்சுப் பயிற்சி) உள்ளிட்ட அட்டாங்க யோகம் முதலியவை கூறப்பட்டிரு க்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் நாம் குறைந்தது வாரத்தில் ஒரு நாளாவது எண்ணெய்க் குழியல் எடுத்துக் கொண்டால் நல்லது.

### இரத்த அழுத்தத்தின் வரம்புகள்


| | |
|---|---|
| நோயற்ற சாதாரண நிலை | 130>85mmHg. |
| சாதாரண இரத்த அழுத்தத்தின் உச்சவரம்பு | 130-139 85-89mmHg. |
| உயர் இரத்த அழுத்தம் | 140>90mmHg. |

### இரத்த அழுத்த நோய் ஏற்படக் காரணங்கள்

01. வயதினால் ஏற்படும் மாற்றங்கள்.
02. இரத்தச் சோகை.
03. கடின உழைப்பில்லா வாழ்க்கை, அதிக தூக்கம்.
04. மது அருந்துதல், புகைபிடித்தல்.
05. தேவையற்ற, முறையற்ற உணவு, பழக்க வழக்கங்கள்.
06. இருதயநோய், சிறுநீரகக் கோளாறுகள், சர்க்கரை நோய் போன்ற நோய்களினால்.
07. நீண்ட நாட்கள் தொடர்ந்து ஸ்டீராய்டு போன்ற மருந்துகளை உட்கொள்ளுதல்.

### இரத்த அழுத்த நோயின் பின் விளைவுகள்

1. இருதய சம்பந்தமான நோய்கள் - இருதயத்தின் செயற்பாடுகளில்



மாற்றம்., இருதய செயலிழப்பு.
2. பக்கவாதம்.
3. சிறுநீரக சம்பந்தமான நோய்கள்.
4. பார்வைக் கோளாறுகள்.

### இரத்த அழுத்த நோய் வராமல் தடுக்க...

(1) சித்தர்கள் நமக்கு வழங்கிய வாழ்க்கை நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல். அதாவது சொல் தூய்மை, செயல் தூய்மை, ஆசனம், பிரணாயாமம் முதலிய உள்ளடங்கிய அட்டாங்க யோகம்.

(2) உணவில் உப்பை (ரேடியம் சேர்ந்த உப்பு) குறைத்து உண்ண வேண்டும். உணவில் நாள் ஒன்றுக்கு 5கிராம் வரை உப்பைச் சேர்த்துக் கொண்டால் போதுமானது.

(3) தற்காலிக் அறிவியலின்படி கொழுப்பு அமிலம் உள்ள சூரிய காந்தி எண்ணெய், சோயா எண்ணெய் மற்றும் நார்ச்சத்து அதிகம் உள்ள உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(4) பொட்டாசியம் சத்துள்ள உணவுப் பொருட்கள் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றன என்று கண்டறிந்துள்ளனர். வாழைப்பழம், இளநீர் போன்றவற்றில் இயற்கையான பொட்டாசியம் சத்து நிறைந்துள்ளது.

(5) உணவு வகைகளில் வெள்ளைப் பூண்டு, வெங்காயம், எலுமிச்சை, போன்ற பழங்கள் பால் போன்றவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளல்.

(6) தேனீர் அருந்துவதாலும் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். எனவே தேனீர் குடிப்பதை நிறுத்தினால் இரத்த அழுத்தம் சாதாரண நிலைக்கு வரும்.

(7) மது அருந்துதல், புகைபிடித்தல் போன்றவற்றை முற்றிலுமாக நீக்க வேண்டும்.

### இரத்த அழுத்த நோய்க்கு சித்த மருத்துவம்

உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் மூலிகைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. நவீன மருத்துவ முறையில் பயன்படுத்தப்படும் ரிஸர்பின் (Reserpine) எனும் மருந்துப் பொருள் சர்ப்பகந்தா என்ற மூலிகையிலிருந்து பெறப்பட்டதுதான்.

சர்ப்பகுந்தா, அமுக்கரா, சீரகம், வாலுறுவை, வெண்தாமரை, மருதம்பட்டை, அதிமதுரம், பூண்டு, செம்பருத்தி போன்ற மூலிகைகள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த பெரிதும் பயன்படுகின்றன.


மேலும், இந்நோயை வருமுன் தடுக்கும் வழிகளில் கூறப்பட்டுள்ள எண்ணெய்க்குழியல், ஆசனங்கள், மூச்சுப்பயிற்சி போன்றவை நோய் ஏற்பட்ட பின்னரும் மேற்கொள்ளலாம்.

இரத்த அழுத்த நோய் ஏற்பட்டபின் ஒருவர் தான் மருந்துகளை மருத்துவரின் ஆலோசனை பெறாமல் தன் விருப்பத்திற் கேற்ப அதிகப்படுத்தவோ, குறைத்தோ உட்கொள்வது மிகவும் ஆபத்தானது. மேலும் இன்றைய நிலையில் வரும் நோயாளிகள் பெரும்பாலும் ஏற்கனவே நவீன மருத்துவ முறை சிகிச்சை பெற்றுக் கொண்டு தான் பிற மருத்துவ முறைகளை நாடுகின்றனர். நவீன முறை மருந்துகளை உடனடியாக நிறுத்துவதும் தவறு. எனவே, நோயாளிகள் தகுந்த, முறையான சித்த மருத்துவம் பயின்ற மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுதல் நலம்.




## கண்நோய் (மெட்ராஸ் ஐ)

இந்த நோய் ''அடினோ'' என்ற வைரஸ் கிருமியினால் ஏற்படுகிறது. 50 வருடங்களுக்கு முன் இதனால் பாதிக்கப்பட்டவர்களைச் சோதனை செய்த போது சென்னையில் தான் இந்தக் கிருமியைக் கண்டுபிடித்தனர். ஆகவேதான் இந்நோய்க்கு சென்னையின் பெயரை வைத்து மெட்ராஸ் ஐ என அழைக்கப்பட்டது.




இந்நோய் வந்தவுடன் கண்ணில் உறுத்தல் ஏற்பட்டு கண் சிவந்து காணப்படும். அந்த நேரத்தில் ஆர்ன்டி பயாட்டிக் கண் மருந்தை உபயோகித்தால் நோய் கட்டுப்பாட்டில் இருக்கும். ஆனால் இந்த வைரஸ் நோயோடு பக்ரீரியாவும் சேர்ந்தால் கண்ணிலிருந்து கண்ணீர் கொட்டும். சீழ் பிடிக்கும். அதிக கண் சீழால் காலையில் எழும்போது உலர்ந்து கண் மூடிக்கொள்ளும். அப்போது அதிக சக்தி வாய்ந்தஆன்டி பயாட்டிக் உட்கொள்ள வெண்டும். அல்லது ஊசி மூலம் மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது கண்ணின் விழித்திரை வரைக்கும் நோய் பரவி பார்வை இழப்பு ஏற்படலாம். அது போன்று கண்ணில் பக்ரீரியா இருக்கும் போது கண்ணைக் கசக்கினால் நோய் விழித்திரைக்கும் பரவி விடும். இந்த நோய் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு சுலபமாகத் தொற்றிக் கொள்ளும். அடினோ வைரசானது 10நிமிடங்கள் காற்றில், துணியில், கர்ச்சிப்பில் வாழும் திறன் கொண்டது. ஆகவே நோயாளி உபயோகித்த பொருட்களை மற்றவர்கள் தொடக் கூடாது.

## கோவாவிலும் நோய் எதிர்ப்பு சக்தி உண்டு

மக்கள் அதிகமாக விரும்பிச் சாப்பிடும் ஓர் உணவுப் பொருளான கோவா 2500ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உணவில் இடம் பிடித்து விட்டது. எத்தகைய குளிரையும் தாங்கும் சக்தியுள்ளதால் இக்கோவாவை குளிர்ப்பிரதேசத்திலே பயிரிடுகின்றனர். இது மலிவாகக் கிடைப்பதோடு பயிரிட சுலபமானது. சத்துக்கள் நிரம்பியது. அத்தோடு சில நோய்களுக்கும் அருமருந்தாகிறது. சீனாவிலேயே .வேகவைத்த கோவாவை வயிற்று வலிக்குச் சிறந்த நிவாரணியாக உபயோக்கிக்கின்றனராம்.

கோவாவில் சூப் செய்து அதனுடன் தேன் கலந்து பருகினால் தொண்டைப்புண் ஆறும். வயிறு மற்றும் கருப்பையில் தோன்றும் கட்டிகளைத் தடுக்கும் சக்தி உள்ளது. கோவா சூப்புடன் கரட் சாறு கலந்து பருகுவது இரத்தச் சோகைக்கு நல்ல மருந்தாகும். வெள்ளரிச் சாறு கலந்து



உட்கொண்டால் வயிற்று நோய்கள் குணமாகும். பச்சையாகக் கடித்துச் சாப்பிட்டால் இரத்த ஓட்டத்துக்கு நல்லது.

# இந்தியாவின் புதிய சாதனை

தொடர் யாருக்கு? என்பதை முடிவு செய்ய நடைபெறுக் கொண்டு இருக்கும், 4-வது டெஸ்டில் 443 ஓட்டங்கள் வெற்றி இலக்காக அவுஸ்திரேலியாவுக்கு இந்திய அணி நிர்ணயித்துள்ளது.

முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியாவை 474 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்து இந்திய அணி. இதனால் முதல் இன்னிங்சில் முன்னிலையாக 231 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய ஸ்கோரை இந்தியா பெற்றது.

இதனால் அவுஸ்திரேலிய அணி பாலோ-ஆன் பெற்றாலும் இந்தியாவே 2-வது இன்னிங்சை துவக்கியது. 2-வது இன்னிங்சில் 2-வது விக்கெட் இழப்பிற்கு 211 ஓட்டங்களுக்கு இந்தியா 2-வது இன்னிங்சை டிக்ளேர் செய்தது.

இதனால் 442ஓட்டங்கள் முன்னிலையை இந்தியா பெற்றது. 443 ஓட்டங்கள் என்ற மொத்த இலக்கை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்சை துவக்கிய அவுஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களை எடுத்திருந்தபோது நேற்றைய 4-ம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ஒருநாள் மீதமுள்ள நிலையில் 10 விக்கெட்டுகள் கையில் உள்ள நிலையில் 433 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் அவுஸ்திரேலியா உள்ளது.

முன்னதாக, இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோரான 705/7(டிக்ளேர்) ஓட்டங்களை எதிர்த்து விளையாடிய அவுஸ்திரேலியா 3-ம் நாள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 342 ஓட்டங்களை எடுத்து இருந்தது. காடிச், பிரட்லீ இருவரும் நேற்றைய 4-ம் நாள் ஆட்டத்தை துவக்கினர்.

அவுஸ்திரேலிய அணியின் முதல் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்திய கும்ப்ளே, நேற்றைய 4-ம் நாள் ஆட்டத்திலும் மீதமிருந்த 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். கும்ப்ளே 141 ஓட்டங்களை கொடுத்து 8 விக்கெட்டுகளைச் வீழ்த்தினார்.

அவுஸ்திரேலிய அணியின் பின்வரிசை சிறப்பாக விளையாடினாலும், பாலோ-ஆன் இலக்கை அவுஸ்திரேலிய அணியால் தாண்ட முடியவில்லை. ஜேசன் கில்லெஸ்பி, காடிச் இருவரும் 8-வது விக்கெட்டிற்கு 117 ஓட்டங்களை சேர்த்து ஸ்கோரை உயர்த்தினர்.

பிரட்லீ, விரைவில் ஆட்டமிழக்க சைமன் காடிச், கில்லெஸ்பி இருவரும் இணைந்தனர். இந்த ஜோடியைப் பிரிக்க இந்தியா படாதபாடு பட வேண்டியதாயிற்று. இந்த ஜோடி விளையாடிய போது காடிச் சதம் அடித்தார்.

கடைசியாக ஒரு வழியாக இந்த ஜோடியை கும்ப்ளே பிரித்தார். காடிச் 125 ஓட்டங்களை எடுத்து சேவக்கிடம் பிடி கொடுத்தார். அடுத்ததாக கில்லெஸ்பி 47 ஓட்டங்களில் விக்கெட்டை வீழ்த்துதல் முறையில் ஆட்டமிழந்தார். வெளி யேறினார்.

உணவு இடைவேளைக்கு முந்தைய ஓவரில் காடிச்சை ஸ்டெம்பிங் செய்ய கிடைத்த அருமையான வாய்ப்பை படேல் வீணாக்கினார். அதேபோல கும்ப்ளே வீசிய பந்தானது கில்லெஸ்பியின் பேட்டில் பட்டு அதையும் பிடியைப் பிடிக்க படேல் தவறினார்.

8-வது விக்கெட்டிற்கு சிறப்பாக விளையாடி இந்தியாவுக்கு பெரும் பிரச்சினையாக இருந்த காடிச், கில்லெஸ்பி இருவரும் ஆட்டமிழந்த பின்னர், வந்த பிராக்கென் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 474 ஓட்டங்களுக்கு அவுஸ்திரேலியா சகல விக்கெட்டையும் இழந்தது.

காடிச் 166 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டரிகளுடன் 125 ஓட்டங்களையும், கில்லெஸ்பி 113 பந்துகளை எதிர்கொண்டு 47 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பாலோ-ஆன் இலக்கிற்கு 32 ஓட்டங்கள் குறைவான ஸ்கோர் அவுஸ்திரேலியா சகல விக்கெட்டையும் இழந்தாலும் இந்திய அணியே 2-வது இன்னிங்சைத் தொடர்ந்தது.



# விக்கெட்டுக்களை வீழ்த்தியது முக்கியமானது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4-வது டெஸ்டில் வெற்றி பெற அந்த அணியின் முதல் 3 விக்கெட்டுகளை வீழ்த்துவது மிகவும் முக்கியமானது என்று இந்திய அணியின் துணைத் தலைவர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

கடைசி நாள் ஆட்டத்தின் போது 90 ஓவர்களில் 433 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் அவுஸ்திரேலியா உள்ளது. இந்த நிலையில் நேற்றைய 4-ம் நாள் ஆட்டத்திற்குப் பின் பேட்டியளித்த டிராவிட் கூறுகையில், லாங்கர், பொண்டிங், ஹெய்டன் மூவரும் நிறைய ஓட்டங்களை குவித்து வருகின்றனர். இந்த போட்டியில் இவர்கள் மூவரும் மிக முக்கியமானவர்கள். இவர்கள் விக்கெட்டை விரைவாக வீழ்த்திவிட்டால், அவுஸ்திரேலிய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்திவிடமுடியும்.

இவ்வளவு பெரிய இலக்கை எதிர்த்து விளையாடுவது என்பது கடினமானது. அதே சமயம் கடைசி நாள் ஆட்டம் முழுவதும் பேட்டிங் செய்வதற்கான நல்ல வாய்ப்பும் உள்ளது. எனவே, உணவு இடைவேளைக்கு முந்தைய பகுதி ஆட்டமானது மிகவும் இன்றியமையாததாகும்.

கடைசி நாள் ஆட்டத்தை ஸ்பெஷலாக நாங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த தொடர் முழுவதும் எப்படி விளையாடினோமோ அதே போலத்தான் நாளைய கடைசி நாள் ஆட்டத்தையும் விளையாடுவோம்.

இதுபோன்ற ஆடுகளத்தில் 300 ஓட்டங்கள் என்பது எடுக்கக் கூடிய எளிதான இலக்கு. எனவே தான் 425 முதல் 440 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயிக்க விரும்பினோம்" என்று கூறிய டிராவிட், ஆஸி. அணிக்கு பாலோ-ஆன் கொடுக்காமல், 2-வது இன்னிங்ஸ்சை இந்தியாவே தொடர எடுத்த முடிவு சரியே என்றும் கூறினார்.

அவுஸ்திரேலிய அணி 300 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்து இருந்திருந்தால் அவர்களை பாலோ- ஆன் விளையாட வைத்திருக்கலாம். ஆனால் நம்மை விட 230 ஓட்டங்கள் தான் அவர்கள் குறைவாக முதல் இன்னிங்சில் எடுத்து இருந்தனர். அவர்கள் ஓட்டக்குவிப்பு வேகத்தை பார்க்கும்போது மிகவிரைவாக இந்த ஸ்கோரை எடுத்துவிடுவார்கள். சூழ்நிலைக்கு ஏற்ப விளையாட முடிவு எடுத்தோம்.

ஒருநாள் முழுவதும் விளையாடக்கூடிய திறமை அவுஸ்திரேலியாவுக்கு உண்டு. ஆனால் கொல்கத்தாவைப்போல துவக்கத்திலேயே விக்கெட்டுகளை வீழ்த்திவிட்டால் அவர்களுக்கு நெருக்கடியை நிச்சயம் கொடுக்கமுடியும் என்றும் டிராவிட் கூறினார்.

நேற்றைய 4-ம் நாள் ஆட்டத்தின் கடைசி நேரத்தில் டிக்ளேர் செய்வது குறித்து எழுந்த குழப்பம் குறித்து டிராவிட் கூறுகையில், எனக்கு காயம் ஏற்பட்ட பின்பு எப்படியும் பெவிலியன் திரும்பித்தான் ஆக வேண்டும். எனவே ஒரு ஓவரை வீணாக்கும் நிலை ஏற்படும். இந்த சூழ்நிலை ஏற்பட விரும்பவில்லை. அதேசமயம் வெளிச்ச குறைவுக்கு மத்தியில் வேகப் பந்து வீச்சாளர்கள் பந்து வீசவும் நாங்கள் விரும்பவில்லை. இதனால் லேசான குழப்பம் ஏற்பட்டது என்று கூறிய டிராவிட், கடைசி நாள் ஆட்டத்தின் போது கும்ப்ளேவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்று கூறினார்.

கும்ப்ளேவின் திறமை, குறித்து ஏராளமான விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் இதற்கெல்லாம் உணர்ச்சிவசப்படாமல், அமைதியாக விளையாடுவதில் மட்டும் கும்ப்ளே கண்ணும் கருத்துமாக இருந்தார். அனுபவமும், தரமும் இருந்ததால், கும்ப்ளே மீதான விமர்சனங்கள் பொய்யாகி விட்டன என்றும் டிராவிட் கூறினார்.




## யுனிசெப், யு.என்.எச்.சி. ஆர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற நிறுவனங்கள் கவனத்திற் கொள்ளுமா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் தனியார் பஸ் நடத்துனர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் 17 வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் எதிர்காலம் என்ன? சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்ற அரசாங்கச் சட்டம் இருந்தும் முதலாளிமார்கள் அரச அதிகாரிகளின் கைகளை லஞ்சத்தின் மூலம் கட்டிப்போடுவதால் அரச அதிகாரிகளோ பொலிசாரோ இவற்றைக் கண்டு கொள்வதில்லை. ஆகையால் குறைந்த சம்பளத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி வேலை வாங்குகிறார்கள். அத்துடது, மிகப் பழைய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அவைகளுக்கு மட்டக்களப்புப் போக்குவரத்து ஆணையாளரால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விடயம். காரணம் காலையில் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது இப்படியான வாகனங்களில் இருந்து அளவுக்கதிகமான புகை வெளிவிடப்படுகின்றது. (கரியில் இயங்கும் ரயில்போல்) இவற்றைத் தினமும் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் சுவாசிக்கின்றனர். அது மட்டுமல்ல கிரான், சந்திவெளி, செங்கலடி, ஏறாவூர், சிவானந்தா, செட்டிபாளையம், களுவாஞ்சிகுடி போன்ற பாதைகளுக்கு அருகிலேயே இருக்கும் பாடசாலைச் சிறுவர்கள் பாடசாலை நேரம் போக மீதி நேரத்தில் பாதை ஓரங்களில் பாடசாலை வளவுக்குள்ளேயே நின்ற படி வேலி க்கம்பிகளைப் பிடித்தபடி பாதையில் செல்லும் வாகனங்களை பார்த்தபடி நிற்கின்றார்கள் இப்படி மேலதிகமாக வெளிவரும் புகைகள் மூலம் சிறுவர்களின் ஆரோக்கியம் கெடுகிறது. அதிலும் மிகவும் வேதனைக்குரிய விடயம் என்ன வென்றால் பார்வையற்ற சிறுவர்கள் இல்லமான தரிசனத்தில் இருந்து அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது எப்பவோ கொண்டு பண்ணப்பட வேண்டிய வாகனங்கள் அவர்கள் மீது புகைகளை வாரி யிறைத்தபடி செல்கின்றன. உண்மையில் ஒரு பார்வையுள்ளவர்களாக இருந்தால் முக்கைப் பொத்திய படி கொஞ்ச நேரம் மூச்சையடக்கிக் கொண்டோ செல்வோம். ஆனால் அவர்களின் நிலமையை கொஞ்சம் சிந்தியுங்கள். மனித நேயம் உள்ள யாவரும் கொஞ்சம் சிந்தியுங்கள். தினமும் நெஞ்சு நிறைய நஞ்சுப் புகைகளை சுவாசித்துக் கொண்டு செல்லும் அந்த வெள்ளைப் பிரம்பு சகோதரர்களை நேயத்துடன் நோக்குங்கள். மட்டக்களப்புப் போக்குவரத்து ஆணையாளருக்கு பணம் மனித நேயத்தை மறைத்து விட்டது. ஆகையால் தான் மேற்படி மனிதநேய நிறுவனங்களுக்கு எனது கோரிக்கைகளை முன்வைக்கிறேன். ஆரோக்கியமான எதிர்கால சமுதாயத்திற்காக!

*ந. விஜிதா.*

## களி மடு ஆற்றிற்குப் பாலம் தேவை

வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள குறிஞ்சாமுனை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள களிமடுக் கிராமம் பல குறைபாடுகளை உள்ளடக்கியதாக அன்று முதல் இன்று வரை காணப்படுகின்றது.

இதில் மிக முக்கிய குறைகளில் ஒன்றாகக் களிமடு ஆற்றிற்கு ஒரு பாலம் இன்மையேயாகும். மழை காலங்களில் இவ்வாற்றில் நீர் நிரம்பி வழிந்து செல்வதால் இங்குள்ள மக்கள் வேறு இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்துத்தடை ஏற்படுகின்றன. அத்தோடு இரவு நேரங்களில் அவசர நோயாளர்களைக் கூட கொண்டு செல்ல முடியாமல் நோயாளர்கள் மரணத்தைத் தழுவிக் கொண்ட சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

பாடசாலை மாணவர்கள் தொழிலாளர் உட்பட பொது மக்கள் அனைவரும் நீண்ட தூரம் சுற்றியே தங்கள் பிரயாணங்களை மேற்கொள்கின்றனர். மற்றும் உரிய நேரத்தில் பொது மக்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையும் ஏற்படுகின்றன.

சுமார் 100 குடும்பங்களைக் கொண்ட இக்கிராமமக்கள் மிக நீண்ட காலமாக இத்தேவையினை அரசாங்கமோ அல்லது தனியார் நிறுவனமோ பூர்த்தி செய்யாதா என்ற ஏக்கத்துடன் தங்கள் உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு காலங்களிக்கின்றனர். எனவே இவர்களுடைய இத்தேவையினைப் பூர்த்தி செய்துஅவர்களது பிரயாணத்திற்கு சௌகரியம் அமைக்க வழி வகுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பு, சார்பற்ற நிறுவனங்களைக் கேட்டு நிற்கின்றேன்.

*நலன் விரும்பி.*

*அன்புடன் வாசகர்களுக்கு!*

*எமது தாயக மண்ணில் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உங்கள் பகுதிகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள், புறக்கணிப்புகள், அதிகாரிகளின் ஊழல்கள், மோசடிகள், இன்னும் எத்தனையோ சம்பவங்களை மனதிற்குள் பூட்டி வைக்க வேண்டாம்.*

*தமிழ் அலையில் வெளிக்கொணருங்கள். தமிழ் அலையில் "அலையின் தேடல்" பகுதி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற் காகக் காத்திருக்கின்றது. அதன் வாயிலாக வெளிவருவதால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.*

*எனவே உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.*

அனுப்ப வேண்டிய முகவரி
அலையின் தேடல்,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

தமிழ்அலை
Tamilalai
தினசரி

# மெதடிஸ்த குருமாருக்கு இவ்வாண்டு இடமாற்றம்

(எஸ்.பேரின்பராசா)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை பேரவையின் வருடாந்த இடமாற்றத் திட்டத்தின் கீழ் மெடிஸ்த்த குருமார் பலர் மலர்ந்துள்ள இப்புத்தாண்டு முதல் வாரத்தில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கமைய கல்முனை மெதடிஸ்த சேகர முகாமைக்குரு அருட் திரு எஸ்.டி.தயாசீலன் மட்டக்களப்பு புளியந்தீவு மெதடிஸ்த சேகரத்திற்கும், வாழைச்சேனை மெதடிஸ்த சேகர முகாமைக்குருவாதப் பணியாற்றிய அருட்திரு ஜோதினி சீனித்தம்பி கல்முனை மெதடிஸ்த சேகரத்திற்கும்,

அருட்திரு ஜெபராணி பேதுறு வாழைச்சேனை மெதடிஸ்த சேகரத்திற்கும் வெள்ளவத்தை மூர்வீதி மெதடிஸ்த தேவாலயக்குரு அருட்திரு எஸ்.எஸ். தம்பிராசா கொழும்பு புறக்கோட்டை மெதடிஸ்த தேவாலயத்திற்கும் மட்டக்களப்பு புளியந்தீவு மெதடிஸ்த சேகர முகாமைக் குருவாகப் பணியாற்றி அருட்திரு எஸ்.எஸ். கருணைராசா வெள்ளைவத்தை மூர்வீதி மெதடிஸ்த முகாசேகர முகாமைக் குருவாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பாண்டிருப்பில் அப்பியாச கொப்பிகள் அன்பளிப்பு

எஸ்.பேரின்பராசா)

பாண்டிருப்பில் நாவலர் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இவ்வூரைச்சேர்ந்த சமுகசேவையாளர் சித்தொண்டர் சிவலிங்கத்தின் புதல்வர் வடிவேல் இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்புச் செய்துள்ளார்

இந்த அப்பியாசக் கொப்பிகளை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் வைபவம் ஓய்வுபொற்ற தபாலதிபரும் இவ் அறநெறியின் பாடசாலை அதிபருமாகிய கவிஞர் வ. ஞானமாணிக்கம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் டாக்டர் எஸ். கிருஸ்னகுமார் பண்பாட்டலுவல்கள் உத்தியோகஸ்தர் பரதன் கந்தசாமி பாண்டிருப்பு நாவலர் வித்தியாலய அதிபர் ஆர்.கோபாலப்பிள்ளை நில அளவையாளர் எஸ்.இள்வரசன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்தனர்.

### காரைதீவு...

ரின் சேவையை இரு மாதத்திற்குள் கிராம மக்கள் பாராட்டுகின்றனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஸ்ணனிடம் கேட்ட போது கடந்த பல வருடங்களாக இவ்வைத்தியசாலையின் நிலை கவலைக்கிடம் எனவும், தற்போது படிப்படியான முன்னேற்றம் காணப்படுவதாகவும், தனியார் சுட்டிக் காட்டிய பின்பு ஏற்பட்ட முன்னேற்றமே தற்போதைய நல்ல நிலைக்கு காரணம் எனத் தெரிவித்த அவர் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேல்பிள்ளை நிர்வாகப் பணிப்பாளர் ராசா ரவீந்திரன், கல்மு[illegible] பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நசீர் ஆகியோருக்கு நன்றியும் தெரிவித்தார்.

இவ்வைத்திய சலையை மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்த சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் கிராம மக்களின் அடுத்த கட்ட நடவடிக்கை வைத்திய சாலையை தரமுயர்த்த நடவடிக்கை எடுப்பதே என்றார்.

தமிழ் அலையின்
இணைத் தளமுகவரி
www.tamilalai.net

# சகல சமயங்களிலும் அவரவர் சமயத்தை அறியாதவர்கள் உள்ளனர்

(பேரின்பராசா)

சைவசமயம் சிவபெருமானை முழு முதலாகக் கொண்ட சமயம் இச் சமயம் எப்பொழுது தோன்றியது யாரால் தோற்றுவிக்கப்பட்டது. எனக் கூறமுடியாத அளவிற்கு தொன்மைவாய்ந்ததாகும் அத்தகைய சமயத்திலுள்ளோர் இச் சமயத்திலுள்ள புராணங்கள் இதிகாசங்கள், திருமுறைகள் என்பனவற்றை நன்கு அறிந்திருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும் இவ்வாறு கல்முனை சந்தனஈஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வில் உரையாற்றிய கவிஞர் அக்கரை மாணிக்கம் குறிப்பிட்டார்.

சமயத்தொண்டர் எஸ். வேலாயுதப்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் சகல சமயங்களிலும் அவர் அவர் சமயங்களைப்பற்றி அறியாதவர்க ளும் உள்ளனர் இதேபோன்று எமது சமயத்தைப் பற்றி அறியாத வர்களும் ஏராளமாக உள்ளனர். இதனாலே மதமாற்றங்கள் இடம் பெறுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் ஆலையங்கள் அறநெறிப் பாடசாலைகள் என்பன சமயக் கல்வியை மக்களுக்கு ஊட்ட முன்வரவேண்டும்.

சைவசமயக் கொள்கை என்னவென்பதை அறியாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று பலபேர் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் ஆண்டவன் மீது பயமோ பக்தியோஇல்லாமல் இருக்கின்றோம் இதற்குக் காரணம் அறியான்மையே என்றார்.

### இலங்கை...

அத்துடன் ''கரேஜஸ்'' கப்பலை இலங்கைக்கடற்படைக்கு வழங்குவது குறித்த நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன் இலங்கை கடற்பகுதி குறித்த தரவுகளையும் திரட்டியிருந்தனர். கரேஜஸ் கப்பல் இந்தவருட இறுதிக்குள் இலங்கையிடம் ஒப்படைக்கப்படும் எனவும், கப்பலில் உள்ள வசதிகள் குறித்தும் இலங்கை மாலுமிகளுக்கு இந்தக் குழுவினர் பயிற்சிகளை வழங்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

210 அடி நீளமான இந்தக் கப்பல் இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டப் பரிமாற்றத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளது. அமெரிக்க-இலங்கை நாடுகளுக்கு இடையிலான இராணுவ உதவிகளை உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான திட்டங்களின் அடிப்படையிலேயே இந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குழு இங்கு வருகை தந்துள்ளதாகத் தெரியவருகிறது.

அமெரிக்க ரோந்துக் கலம் கரேஜஸ் விபரம்

வகை - கரேஜஸ் (Courageous, WMEC -622), தயாரிப்பு - அமெரிக்க கப்பல் கட்டும் நிறுவனம்.வெள்ளோட்டம் - 1967 மார்ச் 18, சேவையிலிருந்து நீக்கம் - 2001 செப்ரெம்பர் 19, பெறுமதி - 30 லட்சத்து 89 ஆயிரத்து 429 டொலர். நீளம் - 210 அடி 6 அங்குலம். அதிகூடிய வேகம் - 18நொட்ஸ் பணிபுரிவோர் - 12 அதிகாரிகளும், 63 பணியாளர்களும். ராடர் வசதி - ஏ.என்.'. எல்.பி.எஸ். 23, 2 ஒ எல்.பி.எஸ் - 66 ஆயுத தளபாடங்கள் - 1 ஒ எம்.கே 22 3-அல்.'. 50 2ஒஎம் 211டீ .50 கலிபர் இயந்திரத்துப்பாக்கிகள் - (1968) 1ஒஎம் 63 .38 25மி.மி இயந்தரத்தப்பாக்கி 2ஒஎம்-2எச்.பி50 இயந்திரத்துப்பாக்கிகள் (1941)

### மட்டக்களப்பில்...

ஈடுபட்டுள்ளனர். எனினும் ஆட்பற்றாக்குறை காரணமாக கண்ணிவெடி அகற்றும் பணி மந்தகதியில் இடம் பெறுவதால் மேலும் 40 பேர் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் பணிபுரிவதற்கு சுமார் 80 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்துள்ளன. இவர்களில 40 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சியும் பாலையடிவட்டையிலேயே நடைபெறவுள்ளதாகவும் இதற்கான பயிற்றுவிப்பாளர்களும் வருகை தந்துள்ளதாக தேவராஜன் மேலும் தெரிவித்தார்.

இவர்களின் பயிற்சிகள் முடிவடைந்ததும் மாவட்டத்தில் கண்ணிவெடி மற்றும் பொறிவெடிகள் உள்ளதாக இனங்காணப்பட்டுள்ள பகுதிகளில் விரைவாக கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொக்கட்டிச்சோலையில் திருவெம்பாவை

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் திருவெம்பாவை, பொன்னூஞ்சல் பூசை வெகு சிறப்பாக படையாட்சி குல மக்களால் இன்று இடம்பெறுகின்றது.

இப்பூசை வழிபாட்டில் அனைத்து சைவ மக்களும் கலந்து கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

### அரச பயங்கரவாத...

ணையுடன் மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் இணைந்து இக்கருத்தரங்கை மட்டு நகர் மாநகரசபை கேட்போர் கூடத்தில் இம்மாதம் 17ம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கே. கந்தசாமி தலைமையில் நடாத்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் சிரேஸ்ட சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் 25 வருட கொடுமைகள் பற்றி கருத்துரையாற்றுவர்.

1979ம் ஆண்டு ஜனவரி மாதம் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.கட்சி அரசினால் நீதி அமைச்சராக இருந்த கே. டபிள்யூ தேவநாயகம் இச்சட்டத்தை நிறைவேற்றினார்.

தமிழனை வைத்து தமிழனை அழிக்கும் நோக்கில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த கே. டபிள்யூ. தேவநாயத்தை ஏவி விட்டு அமுல்படுத்தப்பட்ட சட்டத்தினால் இன்றுவரை பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பல வழிகளிலும் பாதிப்புற்றது மட்டுமின்றி இன்றும் ஆயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்குள் சிறைச்சாலைகளில் வெளியில் வாழ முடியாமல் அடைக்கப்பட்டுள்ளனர்.

கே.டபிள்யூ. தேவநாயகத்தின் கல்குடா தொகுதியில் மட்டும் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இந்த சட்டத்தினால் சித்திர வதைபட்டு கொல்லப்பட்டனர்.

அந்த அரச பயங்கரவாதத்தின் வெள்ளிவிழாவை மட்டக்களப்பில் நினைவு கூருவது பொருத்தமானது என ஏற்பாட்டாளர்கள் தமிழ்அலைக்கு தெரிவித்தனர்.

இன்னும் 14 தினங்களில்..........
வீரம் விளை நிலம், வெற்றிப் பெரும் தளம்
மட்டக்களப்பில்
மாபெரும்
“பொங்குதமிழ்”
கிழக்குப் பல்கலைக்ககழ வளாக விளையாட்டு முற்றத்தில்
21.01.2004~ புதன், காலை 10.00 மணி
சங்கத் தமிழினமே வங்கக் கடல் போல் சங்கமிப்போம் திரண்டு வாரீர்!
எங்கள் உரிமைக்குரலால் உலகத்தை விழிக்கவைப்போம் உணர்வுகளைத் தாரீர்!!

இப் பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 07.01.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.